புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# சவ்வாது மலையில் நடுகல் வழிபாடு

வா. நவிஷ்
முதுகலைத்தமிழ் இரண்டாம் ஆண்டு
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் – 635601, திருப்பத்தூர் மாவட்டம்

## முன்னுரை

இன்றைய நவீன உலகத்தின் நாகரீகவளர்ச்சிக்கு வித்திட்டது நாட்டுப்புறம். உண்மையான பண்பாடு மற்றும் கலாச்சாரங்களின் பிறப்பிடம் கிராமங்கள் தான். நாட்டாரின் வாழ்வியலைப் பற்றி எடுத்துரைக்கும் ஒரு துறை நாட்டுப்புறவியல் காலம் காலமாக நம்பிக்கைகளும் சடங்குகளும் நீங்காமல் இன்றளவும் கடைபிடித்து வருகின்றனர். நாட்டாரின் நம்பிக்கைகள் வழிபடும் தெய்வத்தை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றது. அவ்வகையில் சிறுதெய்வ வழிபாடு மிகவும் இன்றியமையாத ஒன்றாகக் கிராமங்களில் உள்ளது. அந்த வகையில் சவ்வாது மலையில் நடுக்கல்லினை வேடியப்பனாக வழிபடுவதினைக் காண முடிகிறது இதனை சவ்வாது மலையில் நடுகல் வழிபாடு என்ற கட்டுரையின் வழி காண்போம்.

## நடுகல் விளக்கம்

நடுகல் இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக்கல் ஆகும். இவற்றை ''வீரக்கற்கள்'' என்றும் கூறுவர். நினைவுக் கற்கள் எடுக்கும் வழக்கம் ஒரு குறிப்பிட்ட நாட்டுப்பகுதிக்கோ, ஒரு பிரதேசத்துக்கோ அல்லது தனிப்பட்ட பண்பாட்டைச் சேர்ந்தவர்களுக்கோ உரிய வழக்கம் அல்ல. உலகின் பல பகுதிகளிலும் பெருங்கற்காலம் முதலே இவ்வழக்கம் இருந்து வந்துள்ளது. இந்தியாவிலும் வடக்கு, தெற்கு என்ற பேதமின்றி நெடுங்காலமாகவே நடுகற்கள் எடுக்கப்படலாமாயினும், வீரச்சாவு அடைந்தவர்களுடைய நடுகற்களுக்கே பெருமதிப்பு கொடுக்கப்பட்டு வந்தது. வீரர்களுக்காக எடுக்கப்படும் நினைவுக் கற்களை மக்கள் வணங்கி வந்தமையைப் பண்டைக்கால இலக்கியங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன.

## சங்க இலக்கியத்தில் நடுகல்

### தொல்காப்பியம்

''காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று வகையிற் கல்லொடு புணர'' (தொல். பொருள். 63)

இறந்துபட்ட வீரர்களின் நினைவாக நடுகல் நடுவதற்குக் கல்லைப் பார்த்தல், பார்த்த கல்லை எடுத்துக் கொண்டு வருதல், அதனை நீரினால் கழுவுதல், பின்னர் அக்கல்லினை நட்டு வைத்தல் கோயிலாக எழுப்பி அக்கல்லில் அவ்வீரனின் பெயரும் வீர செயல்களை எழுதி, கல்லினைத் தெய்வமாக்கி போற்றிவாழ்த்துதல் எனக் குறிப்பிடுகிறது.

### புறநானூறு

''ஒன்னாத் தெவ்வர் முன்நின்று விலங்கி
ஒளிறு எத்து மருப்பின் களிறு ஏந்து வீழ்ந்ததென
கல்லே பரவின் அல்லது

*நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே.” (புறம். 335)*

இப்பாடலில் பகைவரோடு போர்முனையில் போரிட்டு யானைகளைக் கொன்று இறந்தவனுக்கு வைக்கப்பட்டுள்ள நடுக்கல்லைத் தெய்வமாக வணங்குவதை விடவும் வேறு தெய்வம் இவ்வூரில் இல்லை என்று கூறுகின்றது.

வேடியப்பன் வகைகள்

நடுகல்லாக வைத்து வழிபடக்கூடிய வேடியப்பன் இருக்கும் இடத்திற்குத் தகுந்த சிறப்புகருதி பல பெயர்களில் வணங்கி வருகிறார்கள்.

- மாய வேடியப்பன்
- நொண்டி வேடியப்பன்
- ஐயனார் வேடியப்பன்
- கரி வேடியப்பன்
- கரிய வேடியப்பன்
- வேடர் சிலைக்காரன்
- வீரக்காரன்
- மொச வேடியப்பன்
- ஊமை வேடியப்பன்
- நந்திமேடு வேடியப்பன்
- ஏரிக்கரை வேடியப்பன்
- ஒட்டை வேடியப்பன்
- சாவுமேட்டு வேடியப்பன்
- கிருஷ்ணாரப்பன்
- சன்யாசியப்பன்
- இரட்டை வேடியப்பன்
- குண்டு மேடு வேடியப்பன்
- கல்லாவி வேடியப்பன்
- ஆத்தூர் வேடியப்பன்

என்று பல பெயர்களை வைத்து வழிபாடு செய்கின்றனர்.

வேடியப்பன் திருவிழா

வேடியப்பன் திருவிழாவினைப் பொறுத்த வரையில் ஆனிமாதம், சித்திரை மாதம், ஆவணி மாதம், தை மாதங்களில் விழா நடைபெறுகிறது.

மேல்பட்டு வேடியப்பன் திருவிழா

மேல்பட்டு என்கின்ற இந்த ஊர் ஜவ்வாது மலை (நெல்லிவாசல் நாடு) ஊராட்சியில் அமைந்துள்ளது. திருப்பத்தூரில் இருந்து சுமார் 35 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இந்தக் கோவில் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த கோவில் ஆகும். மேல்பட்டு கோவிலில் இருக்கும் வேடியப்பனை ஸ்ரீ ஐயனார் வேடியப்பன் என்று மக்கள் அழைக்கின்றனர்.

கோவிலின் அமைப்பு

மேல்பட்டு கோவிலின் அமைப்பானது பெரியதாக உள்ளது. ஊரின் எல்லையில் இருக்கிறது. மிகவும் இயற்கை எழில் சூழ்ந்து காணப்படுகின்றன. கோவிலின் வெளிப்பகுதியில் மிகப்பெரிய மரங்கள், எல்லாம் இருக்கின்றது. முதலில் கோவில் கூரை போன்று அழைத்து மக்கள் வழிபாடு செய்து வந்தனர். சில வருடங்கள் கழித்து அந்தக் கூரை தீப்பிடித்து எரிந்துவிட்டதாய்க் கூறப்படுகிறது.

அப்போது அந்த ஊரில் ஒருவருக்கு அருள் வந்து நான் வேடியப்பன் வந்து இருப்பதாகவும் எனக்கு கல் கொண்டு கோவில் கட்டி வழிபாடு செய்யுங்கள் என்று சொல்லப்படுகின்றது. கோவிலின் உள்ளே நுழையும்போது விளக்கு ஏற்றும் கம்பம் இருக்கின்றது. கருவறையின் முன்பகுதியில் நந்திச்சிலை ஒன்று வைக்கப்பட்டு உள்ளது.

கோவிலின் உள்ளே நடுகல்லாக இருக்கக் கூடிய வேடியப்பன் சிலை அருகே புதியதாகச் செய்யப்பட்ட வேடியப்பன் உருவச்சிலையும் உள்ளது. பழமையான கத்தி, சாமைக்கலம், சங்கு, விளக்கு போன்ற பொருள்களும் வைக்கப்பட்டுள்ளன.

திருவிழா

மேல்பட்டு வேடியப்பன் திருவிழாவானது வருடத்திற்கு ஒரு முறை சித்திரை மாதம் மூன்று நாட்கள் நடைப்பெறுகிறது. முதல் நாள் ஸ்ரீ மூங்கில் நாச்சியம்மனுக்குப் பொங்கல் வைத்து வழிபடுகின்றனர். அதன் பிறகு வேடியப்பனுக்குப் பூஜை செய்து மக்கள் வழிபாடு செய்கின்றனர். இரண்டாம் நாள் திருவிழாவின் போது காலையில் மக்கள் அனைவரும் வீடுகளைச் சுத்தம் செய்து மாக்கோளம் இட்டு வீட்டை அலங்காரம் செய்கின்றனர்.



மேல்பட்டு வேடியப்பன் நடுகல்

அதன் பிறகு பகல் 2 மணிக்கு ஊர் மக்கள் பம்பை, சிலம்பாட்டம் ஆடி பொங்கல் கூடை எடுத்து வருகின்றனர். அந்த பொங்கல் கூடை மூங்கிலால் செய்யப்பட்டது. மூங்கில் கூடையில் உள்ளே மண்பானையில் பொருட்களை வைத்து ஊர்வலமாக எடுத்து வருகின்றனர். அதன் பிறகு பொங்கல் வைத்து இரவு முழுவதும் பொங்கல் பானையினை அங்கே வைத்து விடுகின்றனர். அன்று இரவு வேடியப்பன் சாமிக்கு ஏழுகால பூஜைகள் நடை பெறுகின்றது. அப்போது வேடியப்பன் உருவச்சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகின்றது. ஊர்மக்கள் சாமி ஊர்வலமாக வரும்போது தண்ணீர் ஊற்றி கற்பூரம் ஊதுவத்தி ஏற்றி வழிபடுகின்றனர். மூன்றாம் நாள் சாலையில் வேடியப்பனுக்குப் பூஜை செய்து ஆடு வெட்டுகின்றனர். பகல் 12 மணிக்கு மேல்தான் ஆடு வெட்டுவார்கள். கோவிலின் முன்பகுதியில் ஆடு வெட்டுவது கிடையாது. கோவிலின் அருகே தூரமாக ஆடு வெட்டி வழிபாடு செய்கின்றனர்.

படையல் முறை

படையல் முறையினைப் பொறுத்த வகையில் திருவிழாவின் போது ஒரு முறையும் சாதாரண நாட்களில் ஒரு படையில் முறையினை வைத்து வழிபட்டனர். வாழை இலையினை வைத்து அதில் பொங்கல் செய்து, சாதாரண நாட்களில் மக்கள் வழிபாடு செய்கின்றனர். ஆனால் திருவிழா நாட்களில் மூன்று இலையினை வைக்கின்றனர். இரண்டு இலைகளில் பொங்கல் நான்கு திசையில் இருப்பதுபோல ஒரு கூம்பு வடிவில் வைப்பர். அந்தக் கூம்பு வடிவத்தில் நூல் ஒன்றினைக் காட்டி சாமியின் தலைப்பகுதியில் கட்டுகின்றனர் மற்றொரு இலையில் வெற்றிலை பாக்கு, மணி, மஞ்சள், குங்குமம் வைத்து வழிபடுவர்.

மேல்பட்டு வேடியப்பன் கோவில் வெளிப்புற தோற்றம்

மேல்பட்டு ஊரின் நம்பிக்கை



- *விவசாயத்தில் நல்ல விளைச்சல் இருந்தால் வேடியப்பன் கோவிலில் அன்னதானம் செய்கின்றனர்.*
- *மேல்பட்டில் இருக்கும் மக்கள் முதலில் பிறக்கும் ஆண் குழந்தைகளுக்கு வேடியப்பன் என பெயர் வைக்கின்றனர்.*
- *வீடுகளில் சுப நிகழ்வுகள் நடக்க வேடியப்பனுக்குத் தேன் அபிஷேகம் செய்வர்.*

*முடிவுரை*

- *தமிழர்கள் வீரம் நிறைந்த மறவர்களை என்றும் மறக்காமல் அவர்களைத் தெய்வ விழாவில் வணங்கிவருவதை உய்த்துணர முடிகிறது.*
- *அச்ச உணர்வுகள் மூலமாகத் தான் மக்களிடையே இறை நம்பிக்கைகள் தோற்றம் பெற்றுள்ளமையை விளங்கிக் கொள்ள முடிகின்றது.*
- *நடுகல்லில் இருந்து உருவான வீரன் வேடியப்பன் என்னும் கருத்து மக்களிடையே நிலவி வந்தது. மக்களாளே வேடியப்பன் எனக்கருதி அவரை வணங்க தொடங்கினார்கள்.*
- *வேடியப்பன் இருக்கும் இடத்தினைப் பொறுத்துப் பல்வேறு பெயர்களில் மக்கள் அழைக்கத் தொடங்கியமையை உணர்ந்து கொள்ள முடிகின்றது.*
- *உலகத்தில் உள்ள மக்கள் மகிழ்ச்சியின் பொருட்டும் சடங்கின் பொருட்டும் பண்டிகைகளைக் கொண்டாடிவருகின்றனர். அதைப்போலவே வேடியப்பனுக்கு சில இன மக்கள் மட்டும் அன்றைய காலத்தில் பயத்தின் காரணமாக வணங்கி வந்தனர். ஏனென்றால் அச்சத்தின் காரணமாகவே அவை நடந்தன.*

*சான்றெண் விளக்கம்*

1. *திருஞானசம்பந்தம் தொல்காப்பியம் பொருளதிகாரம், நூ.எண். 63.*
2. *புறநானூறு., பா. 335.*


*துணைநூற்பட்டியல்*

1. *முனவைர் க. மோகன்காந்தி - திருப்பத்தூர் மாவட்ட வரலாற்றுத் தடயங்கள்,*
   *காணிநிலம் மு. முனிசாமி - பாரதி புக் ஹவுஸ்,*
   *முதற்பதிப்பு – ஜனவரி 2020,*
   *வேலூர் – 632 004.*
2. *முனைவர் ஆ, பிரபு - திருப்பத்தூர் மாவட்ட வரலாற்று எச்சங்கள்,*
   *பாரதி புக் ஹவுஸ்,*
   *முதற்பதிப்பு – மார்ச் 2021,*
   *வேலூர் – 632 004.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********